# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 8 | செய்முறைத் தொழினுட்பத் திறன்கள் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ......................

### பகுதி – I

❖ **மிகச்சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1) திட்டமிட்ட முறையில் வீட்டுத் தோட்டம் அமைப்பதனால் கிடைக்கும் நன்மையாகக் குறிப்பிடமுடியாதது எது?
   1. குடும்ப போசனைத் தேவைகளை பூர்த்தி செய்யமுடியும்
   2. மனமகிழ்வைப் பெறலாம்
   3. உடற் பயிற்சி இல்லாது போகும்
   4. ஆரோக்கியமான புதிய, தூய்மையான மரக்கறிகளைப் பெறலாம்.

2) உணவு பழுதடைதலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்
   1. உயிரியற் காரணிகள்
   2. இரசாயனக் காரணிகள்
   3. பௌதீக காரணிகள்
   4. மேற்கூறிய யாவும்


3) படத்தில் காட்டப்பட்ட துணைக் கூறின் பெயர் 
   1. மாறும் தடையி
   2. திரான்சிஸ்ரர்
   3. தடையி
   4. ஒளிகாலும் இருவாயி

4) திரான்சிஸ்ரரில் "C" முனைவு எனக்குறிப்பிடப்படுவது
   1. அடி
   2. கலம்
   3. சேகரிப்பான்
   4. காலி

5) இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அறுவடைக்கு பிந்திய சந்தர்ப்பத்தில் மரக்கறிகள், பழங்களின் இழப்புக்களினால் எத்தனை வீதமானது நுகரமுடியாது பாதிக்கப்படுகிறது.
   1. 10% - 15%
   2. 30% - 40%
   3. 20% - 25%
   4. 5% - 15%

6) மேலே படத்தில் X அடையாளக் காட்டப்பட்ட சந்தர்ப்பம் எது.
   1. துவிச்சக்கர வண்டியின சில்லின் அச்சு
   2. குண்டு போதிகை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம்
   3. இரும்பிலான பொருள்
   4. இயங்கக் கூடிய பொருள்

X





kalvi.lk

7) ஈருடக வாழிகள் எனக் குறிப்பிடடுக் கொள்ளக் கூடியது

1. நீர்காகம், கொக்கு
2. தவளை, தேரை
3. இறால், நண்டு
4. திலாப்பியா, கொக்கு

8) வணிகங்களை நடாத்திச் செல்லும் போது வணிகத்துக்குரிய சமூகப் பொறுப்பாக குறிப்பிட முடியாதது.

1. சமூக அபிவிருத்தி
2. தனி இலாப நோக்கம் மாத்திரம்
3. சூழல் நேய வணிகம்
4. நுகர்வோரின் நலனில் கவனம் செலுத்துதல்

9) உயிரினங்களின் நுகர்வுக்குப் பெற்றுக் கொள்ளக் கூடிய நீர் பூமியிலுள்ள மொத்த நீரின் அளவில் எத்தனை சதவீதமாகும்

1. 3%  2. 17%  3. 0.003%  4. 0.3%

10) வேலைத்தளத்தில் பிரதானமாக உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியது

1. வேலை நேரம்  2. சம்பளம்  3. பாதுகாப்பு  4. மேலதிக பிடி

(10x1=10 புள்ளிகள்)

❖ **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

11) இலங்கைக்கே உரித்தான பயிர்ப் பேதங்களில் சுண்டைக்காய் நல்லதொரு உ+ம் ஆகும் (     )

12) வெண்டிக்காயினை நன்கு முற்றவிட்டு அறுவடை செய்தல் நல்லது (     )

13) உவர் சதுப்பு நிலத்திற்கு நந்திக் கடலை அண்மித்த சதுப்பு நிலம் நல்ல உ+ம் ஆகும் (     )

14) அலங்கார கைப்பணி கைத்தொழிலுக்கு பன்வகை கிராம்பன்/கற்பன் போன்றவற்றை பயன்படுத்த முடியாது (     )

15) பீடை கட்டுப்பாட்டுக்கு பெரமோன் பொறி பயன்படுத்தப்படும் (     )

(5x1=10 புள்ளிகள்)

❖ **இடை வெளி நிரப்புக.**

16) கிருமியழிப்பு உபகரணங்களுள்........................................................ பிரபல்யமானதாகும்.

17) வார்ணிஸ் ஐ ................................................... மினுக்கி பதார்த்தமாகக் குறிப்பிட முடியும்

18) மின் ஏற்றத்தை தற்காலிகமாக சேமித்து வைக்க ..................... இலத்திரனியில் சுற்றில் பயன்படுத்துகின்றோம்.

19) சல்வீனியா ஆற்றுவாழை (யப்பானிய ஐங்கோனியா) ஆகியன ................ தாவரங்களாகக் குறிப்பிடலாம்.

20) உற்பத்தியாளன் மொத்தவியாபாரி சில்லறை வியாபாரி .......................... என வழிமுறை அமையும்

(5x1=5 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம் வினா கட்டாய வினாவாகும் ஏனைய விரும்பிய இருவினாக்களை தெரிவு செய்து மொத்தம் மூன்று வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.
- விடை தருகின்ற போது கூடியளவிற்கு பட விளக்கம் எதிர்பார்க்கப்படுகிறது.

1)

1. நீங்கள் இம்முறை செய்முறைக் தொழிநுட்பத் திறன்கள் பாடத்தில் மேற்கொண்ட செயற்றிட்டம் சார் அல்லது செய்முறை சார் செயற்பாடு ஒன்றினை குறிப்பிடுக.
2. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டிற்கு தேவைப்பட்ட பொருட்கள் எவை?
3. நீங்கள் மேற்கொண்ட செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்பாடு என்ன?
4. செயற்பாட்டின் போது எதிர் கொண்ட சவால்கள் எவை?
5. செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவேறிய பின்பு உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் என்ன?

(10 புள்ளிகள்)

2)

1. திட்டமிட்ட முறையில் வீட்டுத் தோட்டம் அமைப்பதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?
2. மண்ணரிப்பைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக?
3. பயிர்ச் செய்கைக் கோபுரத்தைத் தயாரிக்கும் முறையை சுருக்கமாகத் தருக.
4. விலங்கு வளர்ப்புமுறை மூன்றினையும் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

3)

1. வீட்டு உபகரணங்களின் கையாளும் போது/பராமரிக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?
2. இரண்டு வகையான திரான்சிஸ்ரர்களையும் குறிப்பிடுக.
3. மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியை அதிக பயன்தரு நன்மை கொண்டதாகப் பயன்படுதத்தக்க தொழில்நுட்ப ரீதியான (சிக்கன) உத்திகள் எவை?
4. மனித வலுவினால் செயற்படுத்தப்படும் உபகரணங்கள் மூன்று தருக?

(10 புள்ளிகள்)

4)

1. தென்னைப் பயிர் செய்கையுடன் தொடர்புடையடய உற்பத்திகள் 4 தருக.
2. விளம்பரத்தின் அடிப்படைக் கூறுகள் நான்கும் எவை?
3. வியாபாரிகளின் பிரதான நோக்கம் என்ன?
4. வணிகம் எனக்குறிப்பிடப்படுவது எதனை?

(10 புள்ளிகள்)

5)

1. பழுதடைந்த உணவில் காணப்படும் மாற்றங்கள் எவை?
2. யோகட் தயாரிக்கும் முறையை குறிப்பிடுக.
3. உணவு தயாரிப்பவர் ஏனையோரின் ஆரோக்கியத்திற்கு அணிந்து கொள்ள வேண்டியது அல்லது செய்து கொள்ள வேண்டியவை என்ன?
4. உணவை பழுதடையச் செய்யும் உயிரியற் காரணிகள் எவை?

(10 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457